தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு

**கடம்பன் குளம், துலுக்கர் பட்டி மற்றும் நல்லம்மாள்புரம் பள்ளிகளுக்கு சிறப்பு கேடயம்.**

பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவின் சார்பில், **2016–2017** ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு இடையிலான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் **21.03.2017** அன்று பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் வைத்து கீழ்கண்ட விவரப்படி நடைபெற்று வருகிறது. இப்போட்டிகளை 21.03.2017 அன்று காலை 10.00 மணிக்கு **மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பூ. முத்துராமலிங்கம் அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்கள். மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.S. நிர்மலா அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.** இந்நிகழ்ச்சியில் **மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** அனைவரையும் வரவேற்றார்கள். இவ்விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித்தனியாக (Under 14-Junior, Under 17 - Senior and Under 19 - Super Senior ) ஆகிய பிரிவுகளில் நடத்தப்படுகிறது.

மாவட்ட அளவிலான போட்டிகள்

- மாணவ, மாணவியர்களக்கான போட்டிகள் விவரங்கள்.
  தடகளப் போட்டிகள்: 100மீ, 200மீ, 400மீ, 4x 100மீ தொடர் ஓட்டம், வட்டு எறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், நீளந்தாண்டுதல் மற்றும் உயரந்தாண்டுதல்.
- குழுப் போட்டிகள்: கபாடி, கோ–கோ, கையுந்துப்பந்து, வளையப்பந்து, எறிபந்து, இறகுபந்து மற்றும் கால்பந்து.

**மேற்படி போட்டிகளுக்கான நடுவர்களுக்கான கூட்டம் 21.03.2017 அன்று காலை 09.30 மணிக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளிலிருந்தும் உடற்கல்வி இயக்குநர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் கலந்துகொண்டார்கள்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளிலிருந்து **497** மாணவ, மாணவிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டார்கள். மாவட்ட அளவிலான போட்டிகள் Under 14-Junior, Under 17 - Senior and Under 19 - Super Senior என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டு, போட்டிகளில் முதல் மூன்று நிலைகளில் வெற்றி பெறும் **510** வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

**மேற்படி போட்டியில் மாணவ, மாணவிகள் பயிலும் பள்ளிகளில் அதிகளவில் கலந்து கொண்டதற்கான சிறப்பு கேடயம் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி கடம்பன்குளம் பள்ளிக்கும், மாணவிகள் மட்டும் பயிலும் பள்ளியிலிருந்து அதிகளவில் கலந்து கொண்டதற்கான சிறப்பு கேடயம் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி, துலுக்கர்பட்டி பள்ளிக்கும், மாணவர்கள் மட்டும் பயிலும் பள்ளியிலிருந்து அதிகளவில் கலந்து கொண்டதற்கான சிறப்பு கேடயம் அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நல்லம்மாள்புரம் பள்ளிக்கும் வழங்கப்பட்டது.**

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.